திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி நகர தி.மு.கழக அலுவலகத்தில் தாராபுரம் நகர கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம்

குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்!

முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

பெரம்பலூர்,ஜூலை,19–

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்த முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர்.எம்.எல்.ஏ. செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, அவர் குறிப்பிட்டதாவது:–

விஜய் தொடர்ச்சியாக ரெண்டே பேருக்கு தான் போட்டி ஒன்று தி.மு.க இன்னொன்று த.வெ.க.

என சொல்லி வருவதையே, திருமாவளவன் சொல்லியுள்ளார் என நினைக்கிறேன். இதன் மூலமாக அ.தி.மு.க.வை காலி செய்து விடலாம் என்கின்ற எண்ணத்தில் த.வெ.க.வும், விஜயும் இருக்கிறார்கள். ஆனால் பா.ஜ.க. இன்னொரு கோணத்தில் இயங்குகிறது. இதையெல்லாம் சூசகமாகத்தான் திருமாவளவன் பேட்டியாக சொல்லி உள்ளார் என நான் நினைக்கிறேன்,

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளை அழித்தொழிக்க பா.ஜ.க. முயல்கிறது என திருமாவளவன் தெரிவித்துள்ளது குறித்த கேள்விக்கு...

திருமாவளவன் ஜனாதிபதி ஆட்சி வந்து விடக்கூடாது சட்டமன்றம் கலைக்கப்பட்டு விடக்கூடாது எனும் சூழலில் ஆதரவு அளிப்பதாக ஏற்கனவே சொல்லியுள்ளார், இந்த சூழலில் இன்று நடக்கின்ற நடப்புகள் அவரை இந்த செய்திகளை சொல்ல வைத்து இருக்கிறது அவர் எப்போதும் அரசியலை கூர்ந்து பார்த்து பதில் சொல்லக்கூடியவர். எனவே அவர் அரசியலை கூர்ந்து பார்த்து இந்த கருத்துக்களை தெரிவித்ததாக தான் நான் நினைக்கிறேன்.

விஜயின் த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்து இரு விஷயங்கள் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

விடிந்தால் இன்று என்ன நடக்குமோ எனும் பதட்டமாக இருக்கும், மற்றொன்று தினமும் இவர்களே பரபரப்பை கிளப்புகின்ற வகையில் ஏதாவது செய்து கொண்டுள்ளனர். ஆட்சியும் இவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் குதிரைபேரத்தில் ஈடுபடுவது தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செய்தியாக வருகிறது.

பாலியல் குற்றங்கள், லாக்கப் மரணங்கள் காவல்துறை அத்துமீறல்கள் என பல செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது ஆனால் ஒரு செய்திக்கும் முதலமைச்சர் வாய் திறப்பதே இல்லை.

கடந்த காலத்தில் எந்த சம்பவம் நடந்தாலும் அந்த சம்பவத்திற்கு தனது கருத்தை வெளிப்படுத்துவார், லாக்கப் மரணங்கள் நடந்தால் அந்த குடும்பத்தி னரிடம் மன்னிப்பு கேட்டு வருத்தம் கேட்ட செய்திகளெல்லாம் உண்டு. அதை அன்று விஜய் கிண்டல் செய்தார். சாரி சொல்லாதீங்க எங்களுக்கு நீதி தான் வேண்டும் என்றார்.

ஆனால் இன்று அந்த சாரி சொல்லக்கூட இவர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்த தயாராக இல்லை. அதேபோன்று ஒன்றிய அரசின் பல்வேறு நெருக்கடிகள் குறித்தும் வாய் திறக்க இவர் தயாராக இல்லை.

அவர் நினைக்கின்ற போது மேடை ஏறி தனது கருத்தை சொல்லிவிட்டு போய்விடலாம் அதை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார் என அவர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்.

அவரது ரசிகர்களும், ரசிக மனப்பான்மையும் வாக்களித்தவர்கள் தான் அவர் சொல்லும் செய்திக்காக காத்திருக்கின்றனர், மற்ற தமிழ்நாட்டு மக்களை பொறுத்த அளவு ஒரு முதலமைச்சராக தன்னுடைய கடமையை அவர் ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இப்படி அவர் எதற்கும் வாய் திறக்காமல் மௌனமாக இருப்பது மக்களை அவமானப்படுத்துவது போன்றது என்பதை அவர் என்று தான் உணரப்போகிறாரோ? என்பது தான் இன்று கேள்விக்குறியாக?உள்ளது.

த.வெ.க. கூட்டணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய எங்களுடைய பழைய தோழர்களுக்கு, த.வெ.க.வின் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், அதே சமயத்தில் எடுத்த முடிவுகளில் இருந்து பின்வாங்கவும் முடியாமல் மன உளைச்சலில் உள்ளனர். அதைத்தான் அவர்களது சமீபத்திய பேட்டிகள் காட்டுகிறது.

குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வீரபாண்டியன் மிகத் தெளிவாக பேசக்கூடிய கொள்கைவாதி. ஆனால், ஒவ்வொரு நாளும் காலை, மாலை என அவர் அளிக்கும் பேட்டியே வித்தியாசமாக உள்ளதை எல்லோரும் உணர்ந்து இருக்கின்றனர். காலம் தான் இதற்கெல்லாம் முடிவு சொல்லும்.

தி.மு.க. கூட்டணியில் அவர்கள் இருந்தபோது அவர்கள் நினைத்த நேரத்தில் கூட்டணியின் தலைவரான மு.க.ஸ்டாலினை சந்தித்தனர். பல்வேறு கருத்து களை விவாதிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது.

ஆனால் த.வெ.க. தலைவரை அவர்கள் சந்திப்பதே, இன்று பெரிய செய்தியாக வரும் சூழல் மாறி இருக்கிறது. அந்த இடைவெளி என்பது கூட்டணி யில் அரவணைப்பு குறைந்திருக்கிறது என்பதுதான் இப்போதைய சூழல்.

அ.தி.மு.க.வினர் இப்போது தூக்கத்தில் இருந்து எழ வேண்டும். தேர்தல் பிரச்சாரத்தின் போது கொடி பறக்கிறது பார், விரைவில் மிகப்பெரிய கட்சிக்காக காத்திருக்கிறேன் என்றெல்லாம் எடப்பாடி பழனிச்சாமி தொடர்ச்சியாக சொல்லி வந்தார். அதன் காரணமாகவே அதிமுக தொண்டர்கள் நிலை குலைந்து போயினர். அதுதான் சென்னையில் 4 மாவட்ட தோல்விக்கு காரணம். இனியாவது அதிமுக விழித்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் தான் அ.தி.மு.க. என ஆதவ் அர்ஜுனா தொடர்ச்சியாக சொல்லி வருகிறார். அதை நிர்மல் குமார் வழிமொழிகிறார். அ.தி.மு.க.வின் அடிமட்ட தொண்டர்கள் இதை துளியும் விரும்ப வில்லை.

அ.தி.மு.க. தலைமை இன்று ஏற்படுத்தியிருக்கும் தோல்வி, த.வெ.க. வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது. இதனால் அ.தி.மு.க. தொண்டர்கள் மிகுந்த மன வருத்தத்தில் உள்ளனர். எனது குன்னம் தொகுதி நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் அதிமுக தொண்டர்கள் அதைத்தான் என்னிடம் சொல்லினர்.

தி.மு.க.–அ.தி.மு.க. கூட்டணி என மற்றவர்கள் பரப்பும் கருத்துக்கு, கதைகளுக்கு திமுக பதில் சொல்ல வேண்டும் என எதிர்பார்ப்பது, ஒரு நேரட்டிவ் செட்டிங்தான். அந்த பிரச்சினையே இல்லை. குறிப்பாக த.வெ.க. வியூக வகுப்பாளர்கள், ஆதவ் அர்ஜுனாவின் கூட்டம் தான் இந்த செய்தியை பரப்புகிறது.

இல்லாத செய்தியை பரப்புகிற ஒரு கோயபல்ஸ் ஹிட்லருடைய காலம் போல் பிரச்சார பயணம் தான் இன்றைக்கு விஜய் ஆட்சி நடக்கிறது விஜய் கரூர் செல்வதை ஒரு காலமும் தி.மு.க. தவிர்ப்பதற்கு நீதிமன்றம் செல்லவில்லை ஆனால் அன்று வந்த தலைப்பு செய்திகள் முழுவதும் விஜயன் ரூட் மாபியா மூலமாக விஜய் கரூர் செல்வதை தடுப்பதற்காக திமுக மனு போட்டதாக செய்தியை பரப்பினர்.

தி.மு.க. தாக்கல் செய்த மனு நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அப்படி எந்த வார்த்தையும் அதில் இல்லை. எனவே தொடர்ந்து அவர்கள் செய்வதெல்லாம் தலைப்பு செய்திகளை கொடுத்து அதன் மூலமாக மக்களை திசை திருப்புகலாம் என்கின்ற எண்ணத்தில் திமுக அதிமுக கூட்டணி கொடுத்த செய்தியும்.

தி.மு.க. முழு செயல்பாட்டில் களத்தில் உள்ளது. ஆறு மாத காலத்திற்கு இந்த அரசின் சில விஷயங்களை விமர்சிக்க வேண்டாம் என எங்கள் தலைவர் சொல்லியுள்ளார். ஆனால் மக்கள் பொறுத்து இருக்க வில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

கன்னியாகுமரியில் சபரிவர் மன் கஸ்டடி மரணம் அடைந்திருக்கிறார் அங்கு மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். பழனியில் அறநிலைத்துறைக்கு சொந்தமான இடத்தை தனியாருக்கு விற்று உள்ளது நீதிமன்றமே தலையிட்டு கண்டனம் தெரிவித்துள்ளது. அதையும் மூடி மறுத்து திசை திருப்பின்ற விஷயமாக அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லிக் கொண்டுள்ளனர்.

மக்கள் களத்திற்கு வந்துவிட்டனர் தி.மு.க. எதிர்காலத்தில் இந்த அரசை முழுமையாக வெட்ட வெளிச்சப் படுத்தி தி.மு.க.வின் செயல்பாடுகள் தொடரும்.

தி.மு.க. – அ.தி.மு.க. செய்த திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்ள தாவீகா முயற்சிக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக கூட தி.மு.க. ஆட்சியில் எம்ஆர்பி மூலமாக தேர்வு நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி ஆணை வழங்கியுள்ளனர். ஆனால் இந்த 60 நாட்களில் ஏதோ இவர்கள் அறிவிப்பு கொடுத்து தேர்வு நடத்தி அவர்களுக்கு பணி வழங்கியது போல ஒரு ஷோ நடத்துகின்றனர்.

தி.மு.க. செய்த நல்லவற்றையெல்லாம் தாங்கள் செய்தது போல சொல்லுகின்ற அதே வேளையில் தி.மு.க. மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அழித்து விடலாம் என நினைக்கின்றனர். மக்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும். விடியல் பயணத்திட்டம், நான் முதல்வன் திட்டத்தை யார் கொண்டு வந்தது என அவர்கள் அறிவார்கள். இவர்கள் பெயரை மாற்றலாம் மக்கள் மறக்க மாட்டர்.

பா.ஜ.க. எல்லா மாநிலங்களிலும் தங்களது ஆட்சி வரவேண்டும் என விரும்புகின்றனர் அப்படி விரும்புகின்ற போது சில மாநிலங்களில் நேரடியாக அவர்களால் களத்திற்கு சென்று செயல்பட முடியாது அதனால் வேறு சக்திகளை இயக்கி உள்ளே நுழைவது வழக்கம் அப்படி தான் அண்ணாமலையை பாஜகவில் இருந்து வெளியே வர வைத்து தற்போது கட்சி துவங்கியுள்ளனர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.ராஜேந்திரன், வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தி.மதியழகன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 44 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 44வது வட்ட கழகச் செயலாளர் துரைசாமி தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதிச் செயலாளர் த.ஜீவா முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், முருகன், செல்வன், பெருமாள், கிருஷ்ணன், முருகேசன், கண்ணன், ரெஞ்சித் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் விஜயன் விவகாரம்:

கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சி!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, ஜூலை. 19-

மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புதிய தலைமுறை தொலைக்காட்சியின் நெறியாளரும் ஊடகவியலாளருமான விஜயன், விசாரணை என்ற பெயரில் மீண்டும் மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டதோடு, அவரது செல்போன் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் கடும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகவியலாளர்களின் கடமை அதிகாரத்தை கேள்வி கேட்பதும், மக்களுக்குத் தகவல்களை கொண்டு சேர்ப்பதும் ஆகும். ஆனால் அண்மைக் காலமாக விமர்சனக் குரல்களை அடக்குவதற்கும், ஊடகங்களை அச்சுறுத்துவதற்கும் விசாரணை அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன என்ற அச்சம் அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில், ஊடகவியலாளர் விஜயன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை ஊடக உலகிற்கு விடுக்கப்படும் எச்சரிக்கைச் செய்தியாகவே பார்க்கப்படுகிறது.

சட்டத்தின் பெயரால் நள்ளிரவு நேரங்களில் விசாரணைக்காக அழைப்பது, வீட்டிற்குச் சென்ற பிறகும் மீண்டும் வருமாறு வற்புறுத்துவது, சட்ட நடைமுறைகள் குறித்த வெளிப்படைத்தன்மை இன்றி செல்போனை பறிமுதல் செய்வது போன்றவை ஜனநாயக ஆட்சிக்கு ஏற்ற செயல்கள் அல்ல. இது காவல்துறையின் அதிகார துஷ்பிரயோகமாகவும், கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சியாகவும் விளங்குகின்றது.

தமிழகம் கருத்துச் சுதந்திரத்திற்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் பெயர் பெற்ற மண்ணாகும். அவசரநிலை காலத்தை நினைவூட்டும் வகையில் ஊடகவியலாளர்கள் மீது அழுத்தம் செலுத்தும் போக்கு தமிழகத்தில் உருவாக அனுமதிக்கக் கூடாது. ஊடகங்களை அச்சுறுத்தி மௌனமாக்கும் முயற்சிகள் எந்த அரசுக்கும் நல்ல பெயரை ஏற்படுத்தாது.

எனவே, ஊடகவியலாளர் விஜயனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ள செல்போன் உடனடியாக திருப்பி வழங்கப்பட வேண்டும். மேலும், விசாரணை என்ற பெயரில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் மற்றும் அலைக்கழிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் ஜனநாயகத்தின் உயிர்நாடிகள் ஆகும். அவற்றை பாதுகாக்கத் தவறும் எந்த ஆட்சியும் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே பலவீனப்படுத்தும் என்பதை தவெக அரசு உணர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மோடி அரசால் நிகழ்ந்த விபரீதம் - இஸ்ரோவின் பெரும் தோல்விகள்!

'ககன்யான்' திட்டத்துடன் தொடர்புடைய 100 இஸ்ரோ விஞ்ஞானிகள் திடீர் விலகல்!

ஒன்றிய அரசு கடும் அதிர்ச்சி - பணி விலகும் விதிகளைக் கடுமையாக்கி உத்தரவு!

புதுடெல்லி, ஜூலை 19–

இந்தியாவின் விண்வெளி நிறுவனத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வெளியேறி வருவதை தொடர்ந்து பணியில் இருந்து விலகும் விதிகளை அரசு கடுமையாக்கி உத்தரவிட்டுள்ளது. இஸ்ரோவின் ஏ பிரிவு அறிவியல்/தொழில் நுட்ப அதிகாரிகளிடம் இருந்து தாமாக முன்வந்து விருப்ப ஓய்வு மற்றும் , பதவி விலகி வருவதாக கூறப்படு கின்றது. இதுவரை 100க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பதவி விலகி இருப்பது ஒன்றிய அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமாக்கள் தொடர்பான விதிகளை கடுமையாக்கி இஸ்ரோவின் முக்கிய விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்கு விண்வெளித் துறை ஒரு புதிய உத்தரவை பிறப்பி த்துள்ளது. இந்த அதிகாரப்பூர்வ உத்தரவில், 'இஸ்ரோவில் சமீபகாலமாக, மதிப்புமிக்க ககன்யான் மற்றும் பிற முக்கிய திட்டங்களுடன் தொடர்புடையவர்கள் உட்பட, இஸ்ரோவின் 'குரூப் ஏ' அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களிடமிருந்து விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமா கோரிக்கைகள் பெருமளவில் வருவதாகவும், இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கவனிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்படும் திட்டங்கள்!

இஸ்ரோவில் மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் ககன்யான் திட்டம், நிலவிலிருந்து மாதிரிகளை எடுத்து வரும் திட்டமான சந்திரயான்4; இந்தியாவின் விண்வெளி நிலையமாக அமையவுள்ள பாரதிய விண்வெளி நிலையம், செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் திட்டமான மங்கள்யான்2 திட்டப்பணிகள் அப்படியே முடங்கி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மோடி அரசால் நடந்த விபரீதம்!

இந்தியாவை பொறுத்தவரை விண்வெளித்துறையில் இஸ்ரோ மட்டுமே கோலோச்சியது. ஆனால் 2020ல் தனியார் நிறுவனங்களுக்கு விண்வெளித் துறையை மோடி அரசு திறந்து விட்டது.

2023ல் இந்திய விண்வெளி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதும் நாடு முழுவதும் தனியார் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அவை இஸ்ரோவில் இருக்கும் மூத்த விஞ்ஞானிகளை குறிவைத்து அதிக சம்பளம் கொடுத்து வேலைக்கு எடுத்தன.

இந்தியாவில் தற்போது 400க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன; இவை ரூ. 50 ஆயிரம் கோடிமதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளன. இதில் 2025ம் ஆண்டில் மட்டும் சுமார் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது.

பிக்சல், துருவா ஸ்பேஸ், ஸ்கைரூட் ஏரோ ஸ்பேஸ், அக்னிகுல் காஸ்மாஸ், பெலாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ் போன்ற தனியார் நிறு வனங்கள் இத்துறையில் முன்னணியில் உள்ளன.

இஸ்ரோவில் இருந்து சமீபத்தில் 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் விலகி உள்ளனர். இதில் பெங்களூருவில் உள்ள யுஆர் ராவ் செயற்கைகோள் மையம் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள மையங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் வெளியேறியுள்ளனர்.

விலகிய விஞ்ஞானிகளில் சிலர் விண்வெளித் துறை சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் இணைந்துள்ளனர்.

விலகியவர்களில் மூத்த விஞ்ஞானி விக்டர் ஜோசப் டி என்பவரும் ஒருவர். இவர் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் 'ஜியோ சின்க்ரோனஸ் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள் எம்கே III (ஜிஎஸ்எல்வி எம்கே III) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்தார். 'ககன்யான்' விண்வெளிப் பயணத் திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள ஏவு வாகனமான எல்விஎம் 3ன் திட்டத் தலைவராக சுமார் 13 மாதங்கள் பணியாற்றிய பிறகு, விக்டர் ஜோசப் பிப்ரவரி மாதத்தில் பணியிலிருந்து விலகியதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர் எஸ். சோமநாத், சென்னையைச் சேர்ந்த விண்வெளித் துறை ஸ்டார்ட்அப் நிறுவனமான 'அக்னிகுல் காஸ்மோஸ்' இயக்குநர்கள் குழுவில் பார்வையாளராக இணைந்துள்ளார். 2025 ஜனவரி வரை இஸ்ரோ தலைவராகப் பணியாற்றிய அவர், நிலவின் தென் துருவத்திற்கு அருகில் சந்திரயான்3 வெற்றிகரமாகத் தரையிறங்கியது மற்றும் இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலமான ஆதித்யாஎல்1 ஏவப்பட்டது உள்ளிட்ட பல முக்கியத் திட்டங்களை வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரோ எதிர்கொண்ட பெரும் தோல்விகள்!

இஸ்ரோவில் இருந்து மூத்த விஞ்ஞானிகள் விலகியதால் இஸ்ரோவின் விண்வெளி திட்டங்கள் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்துள்ளன. அதன் விவரம்:

இஸ்ரோவின் நம்பகமான 'போலார் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள்' (பிஎஸ்எல்வி) ஏவு வாகனம், ஓராண்டுக்குள் இரண்டு தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்தது.

ஜனவரி மாதத்தில், இஓஎஸ் என்1(EOSN1) புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் பல வணிகரீதியான செயற்கைக்கோள்களைச் சுமந்து சென்ற பிஎஸ்எல்விசி62 ஏவு வாகனம், அதன் மூன்றாம் கட்டத்தின் இறுதியில் ஏற்பட்ட பிரச்னைகள் காரணமாகத் திட்டமிடப்பட்ட பாதையிலிருந்து விலகிச் சென்றது.

கடந்த ஆண்டு மே மாதம், பிஎஸ்எல்வி சி61/EOS09 (ரிசாட்1பி) ஏவு வாகனம் 529 கி.மீ உயரத்திலுள்ள சூரியஒத்திசைவு சுற்றுப்பாதையை அடையத் தவறியது. மூன்றாம் கட்டத்தின் செயல்பாட்டில் ஏற்பட்ட குறைபாட்டினால், சுமார் 203 வினாடிகளுக்குப் பிறகு எரிபொருள் அறையின் அழுத்தம் (திடீரெனக் குறைந்ததால், அப்பயணம் நிறுத்தப்பட்டு அந்த ரேடார் செயற்கைக்கோள் அழிந்தது.

இஸ்ரோ விஞ்ஞானிகள் பதவி விலகுவது குறித்த கேள்விக்கு ஒன்றிய தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில்,' இஸ்ரோவில் மிகப் பெரிய பணியாளர் படை உள்ளது. சிலர் வெளியேறும்போது பலரும் புதிதாக இணைகிறார்கள். பலர் சென்றுள்ளனர், பலர் வந்துள்ளனர். இதில் எந்த சர்ச்சையும் இல்லை' என்றார்.

அரசு கலை – அறிவியல் கல்லூரிகளில் –

ஆகஸ்ட் மாதத்துக்குள் முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்படும்!

கல்லூரிக் கல்வி ஆணையரகம் தகவல்!

சென்னை, ஜூலை 19-

தமிழ்நாட்டில் 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளும் 7 அரசு கல்வியியல் கல்லூரிகளும் உள்ளன. இவற்றில் 58 கல்லூரிகள் கிரேடு 1 கல்லூரிகள், எஞ்சிய 130 கல்லூரிகள் கிரேடு 2 கல்லூரிகள். இந்நிலையில், 25 கிரேடு1 கல்லூரிகளிலும், 100 கிரேடு2 கல்லூரிகளிலும் நீண்ட காலமாக முதல்வர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. இதுதவிர கிரேடு1 கல்லூரி முதல்வர் நிலையில் 2 மண்டல இணை இயக்குநர் பதவியும் காலியாக இருக்கிறது.

அரசு கல்லூரிகளில் நீண்ட காலமாக காலியாகவுள்ள உள்ள முதல்வர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது குறித்து கல்லூரி கல்வி ஆணையரகத்தில் கேட்டபோது, "கிரேடு1 அந்தஸ்து கல்லூரிகளில் முதல்வர் பதவி காலியாகவுள்ள 24 இடங்களில் முதல்கட்டமாக 12 இடங்களை நிரப்புவதற்கான தகுதி பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, விரைவில் அந்த காலியிடங்கள் நிரப்பப்பட்டுவிடும். அதேபோல், எஞ்சிய கிரேடு1 கல்லூரிகளிலும் கிரேடு2 காலியிடங்களிலும் ஆகஸ்ட் மாதத்துக்குள் முதல்வர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பபட்டுவிடும். இந்த பணியை ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம்" என்றனர்.